## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கம்பனியின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கம்பனியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிணிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்குதல் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கணக்கீட்டு முறைமையில் கணக்காய்வின் வசதி (Audit Trail) மேம்படுத்தப்பட வேண்டும். அனைத்து நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் துணை ஆவணங்களுடன் கையொப்பமிட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | எம்மால் Tally கணனி மென்பொருள் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அதன் ஊடாக துணை ஆவணங்கள் தயாரித்தல் இடம்பெறுகின்றது. எதிர்காலத்தில் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் வேறாக தயாரிக்கப்பட்டு கையொப்பமிட்டு கோவப்படுத்தப்பட்டு வைக்கப்படும். | கணக்காய்வு வசதியுள்ள செயற்திறனான கணக்கீட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறே நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு நியதிகளின் பிரகாரம் உறுதிச்சீட்டு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் நிதிப்பிரிவின் மூலம் மூலம் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காக கணக்கு கைநூலொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அனைத்து நிதிக் கட்டுப்பாடுகளையும் மேவுகை செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அக்கைநூல் அனைத்து நிதி நடவடிக்கைகளையும் மேவுகை செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது. | கணக்கு நடவடிக்கைகளுக்குரிய சகல வழிகாட்டல்களையும் உள்ளடக்கி கணக்கு கைநூல் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஒப்பந்த வருமானம் மற்றம் செலவின அறிக்கையிடல் காலப்பகுதிக்குரிய ஒப்பந்த செயற்பாடுகளின் இறுததி கட்டத்தின் பிரகாரம் இனங்காணப்பட வேண்டிய போதும் கம்பனியின் ஒப்பந்த வருமானம் இனங்காணும் கொள்கை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 23.17 ஆம் பிரிவிற்கு இணங்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டின் கம்பனியின் ஒப்பந்த வருமானமான ரூபா 221.95 மில்லியன் நியமத்தின் பிரகாரம் இனங்காண முடியாதிருந்தது. | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலகளில் குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களில் 23.17 ஆம் பிரவின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் பொறியியலாளர் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செய்யப்பட்ட வேலை பெறுமதி இறுதி கட்டத்தின் பேரில் இனங்காணப்பட்டு ஒப்பந்த வருமானம் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கம்பனியால் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | |
| (i) | அறவீடு தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் அறிக்கையிடல் பிரிவு மற்றும் தொடர்புடைய | தொடர்புடைய தரப்பினரான இலங்கை காணி மீள்நிரப்பல் மற்றும் அபிவிருத்தி | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | தரப்பினருக்கு இடையே மாற்றப்பட்ட வளங்கள், சேவைகள் அல்லது அல்லது கடப்பாடுகள் மற்றம் தொடர்புடைய தொடர்புட்ட தரப்பினருக்கிடையே இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் | கூட்டுத்தாபனம் மற்றும் LRDC (Services) கம்பனியுடன் கொடுக்கல் வாங்கல்கணக்கு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அப்பெறுமதி 30 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | கீழே காட்டப்பட்ட விடயங்களின் கீழ் அதாவது (அ) குறுகிய கால ஊழியர் நலன்கள் (ஆ) சேவைக்கு பின்னரான நலன்கள் (இ) ஏனைய நீண்டகால நலன்கள் (ஈ) சேவை முடிவுறுத்தலிலான நலன்கள் மற்றும் (உ) உரிமையின் பிரகாரம் கொடுப்பனவு, கம்பனியின் செயற்பாடுகள் நேரடியாக அல்லது மறைமுகமாக முழுமையாக திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் அதிகாரமுள்ள பொறுப்பான பிரதான முகாமைத்துவ பதவிகள் வகிக்கும் நபர்களுக்கான கொடுப்பனவு செய்யப்படும் நட்டஈடு | முன்னால் தலைவருக்கு ரூபா 37,500 ஆன படியொன்றும், தற்போதய தலைவருக்கு ரூபா 180,000 ஆன படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன. (பணிப்பாளர் கட்டணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.) ரெடேகொ கம்பனியின் பொது முகாமையாளருக்கு ரூபா 2,480,000 தொகை கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | இருப்பு கணக்கு வைப்பிற்கான சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 13.4 ஆம் பிரிவின் பிரகாரம் இருப்புக் கிரயம் அல்லது தேறிய தீர்வை பெறுமதி குறைந்த பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனிக்குச் சொந்தமாக காணப்பட்ட ரூபா 13.13 மில்லியன் இருப்பு மதிப்பீடு செய்யும் போது தீர்வையாகும் பெறுமதி கருத்திற்கொள்ளப்படாமல் இருப்புக் கிரயத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | அனைத்து இருப்புக்களும் FIFO முறைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டதால் தற்போதய பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இருப்பு கிரயம் மற்றும் தேறிய தீர்வையாகும் பெறுமதியில் குறைந்த பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதலால் கிரயம் தேறிய தீர்வை பெறுமதியை வட குறைவாகும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் இருப்பு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 25.2 ஆம் பிரிவின் பிரகாரம் கடன் வட்டி மூலதனமாக்க முடியாத போதிலும் இலங்கை காணி மீள்நிரப்பல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திடம் மீளாய்வாண்டில் பெற்ற ரூபா 118.75 மில்லியனுக்குரிய ரூபா 3.22 மில்லியனான வட்டி | இலங்கை காணி மீள்நிரப்பல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திடம் பெற்ற ரூபா 118.75 மில்லியன் கடன் தொகை ரெக்கடோ கம்பனியின் மணல் செயற்திட்டத்திற்காக பெறப்பட்டது. ஆதலால் குறித்த கடனுக்கான வட்டி குறித்த செயற்திட்டத்திற்கு வரவு வைக்கப்பட்டதுடன் | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கடன் வட்டி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனமாக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கிடைக்கும் வருமானத்திற்கு வட்டி ஈடுசெய்யப்படும். | |
| (உ) | சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 2.26 (ஆ) பிரிவின் பிரகாரம் இனங்காணப்பட்ட நட்டங்கள் விரைவில் நிதிச்செயலாற்றல் கூற்றில் நட்டமாக இனங்காணப்பட வேண்டிய போதும் 2012-2016 காலப்பகுதியில் கம்பனியால் நிறைவேற்றப்பட்ட தோல்வியடைந்த ஒப்பந்தங்களின் கிரயமான ரூபா 20.83 மில்லியன் அவ்வாறு நட்டமொன்றாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் இலாபம் அப்பெறுமதியால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட தவறுகள் காணப்பட்டதால் இது தொடர்பாக உரிய நிறுவனங்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் இனங்காணப்பட்ட நட்டங்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 28.24 ஆம் பிரிவின் பிரகாரம் ஊழியர் நலன்கள் கணக்கிடும் போது ஆயுட் கணிப்பீட்டு சாதகம் மற்றும் பாதகம் (loss) இனங்காணப்பட வேண்டிய போதிலும் கம்பனி அவ்வாறு செய்திருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது மதியுரைக் கம்பனியின் சேவை பெறப்பட்டு இக்கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் ஆயுட் கணிப்பீட்டு சாதகம் / பாதகம் இனங்காணப்பட்டு கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனி பெற்றுக்கொண் கடன்தொகைக்குரிய வட்டிச் செலவினம் ரூபா 6.26 மில்லியனாக இருந்த போதும் அப்பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 3.04 மில்லியனாக காட்டப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 3.22 மில்லியனால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. | இலங்கை காணி மீள்நிரப்பல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திடம் பெற்ற ரூபா 118.75 மில்லியன் கடன் தொகை ரெக்கடோ கம்பனியின் மணல் செயற்திட்டத்திற்காக பெறப்பட்டது. ஆதலால் குறித்த கடனுக்கான வட்டி குறித்த செயற்திட்டத்திற்கு வரவு வைக்கப்பட்டதுடன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கிடைக்கும் வருமானத்திற்கு | சரியாக கடன் வட்டி செலவினம் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வட்டி ஈடுசெய்யப்படும். | |
| (ஆ) | கம்பனியின் நாவல தொழிற்சாலைகளில் கம்பனியின் வாகங்கள் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அதற்காக வருமானம் இனங்காணலொன்று (Income Recgnition) மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் குறித்த வேலை கிரயம் தொழிற்சாலை கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | திருத்த வேலைகளுக்காக அனுப்பி வைக்கப்படும் வாகனங்களுக்காக பொருட்களின் கிரயம் வாகனங்களுக்கான வருமான திருத்த வேலைகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக செலவாகும் மனித உழைப்பு மணித்தியாலங்கள் மாத்திரம் கணக்கிட முடியாமையால் அது இனங்காணப்பட்டிருக்கவில்லை. எதிர்வரும் ஆண்டின் போது மாதிரிப்பட்டியல் இனங்காணப்படுவதுடன் அதன் போது சகல கிரயங்களும் இனங்காணப்படும். | ஒவ்வொரு செயற்பாட்டிற்காக வேலைக் கிரயத்திற்குரிய வருமானம் இனங்காணப்பட்டு கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். |

## 1.5.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகள் அதற்குரிய அட்டவணைகளுடன் ஒப்பிடப்படாமல் இருந்ததுடன் அதற்கிடையே ரூபா 134,868 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இந்த ரூபா 134,277 ஆன வாடகை அடிப்படையில் கட்டணங்கள் ஆண்டின் வட்டியாக இலாப நட்டக் கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆதலால் அட்டவணையிலிருந்து நீக்கப்பட வேண்டும். வங்கி அறிக்கை மற்றும் எமது காசேட்டின் பிரகாரம் ரூபா 591/- ஆன வேறுபாடு அவதானிக்கப்படவில்லை | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகள், அட்டவணைகளுடன் ஒப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட |

## 1.5.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| விடயம் | | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | நடைமுறை வேலை | 49,750,716 | பொறியியலாளர் சான்றிதழ் | பொறியியலாளர் சான்றிதழ் இணைக்கப் பப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகள், அட்வணையுடன் ஒப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஒப்பந்த தாமத கட்டணங்கள் கோரல் 5,646,254 மீதி உறுதிப்படுத்தல் | கடிதம் இணைக்கப் பப்பட்டுள்ளது. | கம்பனியின் கடன்பட்டோர் ' கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் அந்த சேவை நாடுனரிடம் இருந்து கொண்டு வந்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 16,272,418 ஆன பெறவேண்டிய ஆரம்பிப்பு முற்பண மீதியில் 2 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய முற்பண மீதி ரூபா 6,690,617 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையான முற்பண மீதி ரூபா 8,764,572 ஆக இருந்தது. அவ்வாறே ரூபா 8,764,572 ஆன 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முற்பணமாக வழங்கிய திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை தீர்வுசெய்யும் காலம் இனங்காண்பதற்கு கணக்காய்விற்கு முடியாமல் இருந்தது. | இந்த ரூபா 16,272,417.82 தொகை ICTAD நியமத்தின் பிரகாரம் குறித்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ஆரம்பிப்பு முற்பணமாக இருந்ததுடன் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் இவற்றை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய முற்பணங்களை விரைவில் அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் இறுதியில் காணப்பட்ட ரூபா 68,361,135 ஆன பெறவேண்டிய நிறுத்திவைத்தல் மீதியில் 2 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய முற்பண மீதி ரூபா 33,308,354 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கிடைக்க வேண்டிய முற்பண மீதி ரூபா 10,247,930 ஆக இருந்தது. | ரூபா 68,361,135 ஆன பெறவேண்டிய நிறுத்திவைத்தல் மீதியில் ரூபா 10.8 மில்லியன் தொகை மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தங் களுக்குரியதாகும் எஞ்சிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் எதிர் காலத்தில் இப்பணத்தை நிறுவனத்தின் மூலம் கொடுப்பனவு செய்யப்படும். | பெறவேண்டிய நிறுத்தி வைத்தல் பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 79,785,982 ஆக இருந்ததுடன் அதில் ஓராண்டிற்கு குறைய பெறவேண்டிய மீதி ரூபா 67,527,659 ஆக இருந்ததுடன் ரூபா 6,492,772 தொகை 1 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடையிலான காலப்பகுதியிலும் ரூபா 5,913,021 தொகை 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக அறவிடப்படப்படாமல் காணப்பட்டது. | இப்பட்டியல் குறித்த நிறவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணம் அடுத்த ஆண்டின் போது கிடைக்கவுள்ளது. | கடன் பட்டோர் மீதிகள் விரைவில் அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 48,068,529 செலுத்த வேண்டிய முற்பண மீதியில் 2 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக செலுத்த வேண்டிய முற்பண மீதி ரூபா 23,610,064 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட செலுத்த வேண்டிய மீதி ரூபா 8,616,126 ஆக இருந்தது. | இந்த ரூபா 48,068,529 தொகை ICTAD நியமத்தின் பிரகாரம் குறித்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக எமக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 28,049,834.49 ஆன ஆரம்பிப்பு முற்பணத்திற்காக ஒப்பந்தம் நடைபெற்று வருகின்றது. எஞ்சிய ரூபா 20,018,694.87 ஆன தொகைக்காக வேலை இடை நிறுத்தப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் பட்டியலை குறித்த நிறுவனத்தின் மூலம் தீர்வு செய்யப்படும். | செலுத்த வேண்டிய முற்பணங்களை விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன்தீர்ப்பதற்கு பொறுப்பொன்றில்லாத முற்பணத்தை இனங்கண்டு வருமானத்திற்கு பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் இறுதியில் காணப்பட்ட ரூபா 51,699,469 ஆன செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் மீதியில் 2 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக செலுத்த வேண்டிய முற்பண மீதி ரூபா 29,901,472 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட செலுத்த வேண்டிய முற்பண மீதி ரூபா 9,694,904 ஆக இருந்தது. | ரூபா 51,699,469 ஆன செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் மீதியில் ரூபா 11.9 மில்லியன் தொகைக்கான ஒப்பந்த வேகைள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. அப்பணம் குறித்த வேலை பூர்த்தி செய்யப்பட்டதும் கொடுப்பனவு செய்யப்படும். எஞ்சிய ரூபா 39,775,775 தொகையை ஒப்பந்தத்தை வழங்கிய நிறுவனத் திடமிருந்து கோரப்பட்டுள்ளதுடன் அத்தொகை கிடைத்ததன் பின்னர் கொடுப்பனவு செய்யப்படும். | செலுத்த வேண்டிய முற்பணங்களை விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தீர்ப்பதற்கு பொறுப்பொன்றில்லாத முற்பணத்தை இனங்கண்டு வருமானத்திற்கு பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் வியாபாரக் | இந்த கொடுப்பனவு செய்ய வேண்டிய கடன்கொடுத்தோர் மீதி | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்வு |

| | | | |
|---|---|---|---|
| | கடன்கொடுத்தோர் மீதி ரூபா 30,497,048 ஆக இருந்ததுடன் அதில் 2 ஆண்டுகளிற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட தீர்வு செய்யப்படாத மீதி குறைய ரூபா 2,469,480 ஆக இருந்ததுடன் 5 ஆண்டு களுக்கும் மேற்பட்ட கடன்கொடுத்தோர் மீதி ரூபா 9,908,397 ஆக இருந்து. | ரூபா 30,497,046 தொகையில் 12 மில்லியன் இலங்கை காணி மீள்நிரப்பல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய மீதியாகும். இது தீர்வு செய்யப்படவில்லை. ரூபா 16.8 மில்லியன் தொகையொன்று தற்போது கடன்கொடுத்தோருக்கு செலுத்தப்படவில்லை. | செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மேலும் பொறுப்பொன்றாக இல்லாத மீதிகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்த கடன்கொடுத்தோர் மீதி ரூபா 4,455,907 ஆக இருந்ததுடன் தீர்வு செய்யப்படாத மீதி ரூபா 2,464,118 ஆக இருந்ததுடன் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,817,870 ஆக இருந்தது. | இந்த ஒப்பந்த கடன் கொடுத்தோருக்கு கொடுப்பனவு செய்வதற்காக ஒப்பந்தம் வழங்கிய நிறுவனத்திடமிருந்து பணம் பெற வேண்டியிருந்ததுடன் அதன் பின்னர் இந்த ஒப்பந்தக்காரருக்கு அத்தொகை தீர்வு செய்யப்படும். விளையாட்டு அமைச்சிலிருந்து இப்பணம் கிடைக்க வேண்டியுள்ளது. | ஒப்பந்த கடன் கொடுத்தோர் மீதிகள் காலரீதியாக தீர்வுசெய்ய போதியளவில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய நபர் தொடர்பாக வெளிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் தாய் கம்பனியான இலங்கை காணி மீள்நிரப்பல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திடமிருந்து கம்பனிக்கு பெறவேண்டியதாக கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 8.61 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்த போதும் தாய் கம்பனியின் புத்தகங்களின் பிரகாரம் அது ரூபா 32.56 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக எண்ணிக்கைக்கு இடையே ரூபா 23.95 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் இவ்வேறுபாட்டிற்குரிய சீராக்க கூற்று கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை. | கூட்டுத்தாபனத்திடமிருந்து கம்பனிக்கு பெறவேண்டியதாக கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 8.61 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்த போதும் உள்ளவாறாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 35.73 மில்லியனாகும். அதற்காக சம்பளம் மற்றும் ஏனைய பெறவேண்டியவை கணக்கில் மீதிகளாக உள்ளடக்கப்பட வேண்டும். | தொடர்புடைய தரபபினர் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ஒப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் தாய் கம்பனியான இலங்கை காணி மீள்நிரப்பல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தா பனத்திற்கு கம்பனிக்கு பெற வேண்டியதாக கூட்டுத்தா | ரூபா 72.32 மில்லியன் கம்பனியிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டுமென கூட்டுத்தாபனத்தின் | தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ஒப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | பனத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 72.32 மில்லின் காண்பிக்கப்பட்டிருந்த போதும் கம்பனியின் புத்தகங்களின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய அப்பெறுமதி ரூபா 14.87 மில்லியனாக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் அதற்கு இடையே ரூபா 57.45 ஆன வேறுபாடொன்று இருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் கம்பனியால் செலுத்த வேண்டிய தொகை நடைமுறைக் கணக்கில் ரூபா 14.8 மில்லியனாகும். | காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1.06 மில்லியன் வ/ப எல்ஆர்டீசீ சேவைகள் (தனியார்) கம்பனிக்கு செலுத்த வேண்டிய போதிலும் அப்பெறுமதி வ/ப எல்ஆர்டீசீ சேவைகள் (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டியதாக ரூபா 1.51 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்தது. | இத்தொகை தெதமுல்ல மற்றும் மாபிம வேலைத் தளத்திற்காக வழங்கப்பட்ட பாதுகாப்பு சேவைக்கான பணமாகும். சில பட்டியல்கள் காணாமல் போயிருந்த மையால் இவ்வேறுபாடு உருவாகியுள்ளது. பட்டியல்களின் பிரதிகளை எடுத்து 2019 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ஒப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

**1.5.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

---

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) கம்பனியின் நிதி செயற்பாட்டு வழிகாட்டல் கோவை<br>i. 3.2.1 (இ) 4 ஆம் பிரிவு | பெற்றுக்கொ்ணட முற்பணங்களை 20 நாட்களுக்குள் தீர்வுசெய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 30 நாட்களுக்கு மேற்பட்ட தீர்வுசெய்யாத முற்பண மீதி ரூபா 118,206 ஆக இருந்தது. | இம்முற்பணத்தொகையை குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இத்தாமதத்திற்கு காரணம் ஒப்பந்தக்கார வேலைத்தளங்களில் பட்டியல் தாமதமாகும். | கம்பனியின் நிதி செயற்பாட்டு வழிகாட்டல் கோவை யின் பிரகாரம் முற்பணத்தை காலரீதியாக தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii. 3.1.1.1 பிரிவு | வழங்கப்படக்கூடிய முற்பணத் தொகை ரூபா 50,000 ஆக இருந்த போதும் அம்பாறை மற்றும் ஹிங்குரக்கொடை தொழிற்சாலை சொத்துக்கள் | இது சில்லறைக் காசல்லகுறித்த வேலைத்தளத்தினை பரீட்சிப்பதற்காக பிரயாணச் செலவினம் வழங்கப்பட்டுள்ளது. | கம்பனியின் நிதி செயற்பாட்டு வழிகாட்டல் கோவை யின் பிரகாரம் முற்பண எல்லை அடிப்படையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மெய்மையாய்விற்காக ரூபா 135,000 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | | காலரீதியாக முற்பணம் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.4 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதியில் மீதி ரூபா 6,773,808 ஆன ஆரம்பிப்பு முற்பணம் 18 இருந்ததுடன் அதில் 11 முற்பணங்களுக்காக முற்பண பிணையினை கம்பனி பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | இந்த ரூபா 6,773,808 மில்லியன் தொகைக்காக முற்பண பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் உரிய பட்டியல் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டு எமது சேவை நாடுனருக்கு வழங்கப்பட்ட போதும் பட்டியல் கொடுப்பனவு செய்யாமையின் பேரில் இவ்வாறு இடம் பெற்றிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் முற்பணம் வழங்க முன்னர் கம்பனியின் நிதி செயற்பாட்டு வழிகாட்டல் கோவை யின் பிரகாரம் முற்பணத் தொகையை வழங்க முன்னர் முற்பண பிணையினை பெற்றுக் கொள்ள எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் வரிக்கு முன்தேறிய இலாபம் ரூபா 5.040 மில்லியனாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபமான ரூபா 18.294 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைளவுகளில் ரூபா 13 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் நிர்வாகச் செலவினம் ரூபா 6 மில்லியனால் அதிகரித்தமை மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 7.75 மில்லியனால் குறைவடைந்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.1.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

------------------------------------------------

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் ஒப்பந்த வருமானம் ரூபா 7.89 மில்லியனாலும் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 3.15 மில்லியனாலும் ஹிங்குரக்கொடை தொழிற்சாலை வருமானம் ரூபா 1.70 மில்லியனால் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக 2018 ஆம் ஆண்டில் தேறிய இலாபம் ரூபா 13.25 மில்லியனால் வீழ்ச்சியடைந்தமையால் இலாப எல்லை 5.36 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொட்டகல தொழிற்சாலை அமைந்துள்ள 1 ஏக்கர் 31 பேர்ச்ச அளவிலான காணி 2002 ஆம் ஆண்டின் போது ரூபா 10 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்டு கையேற்பதற்காக ரூபா 3.83 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை அக்காணியை கம்பனிக்கு பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்காணி 3.83 மில்லியனுக்கு பின்னர் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அதன் பிரகாரம் இத்தொகை முழுமையாக செலுத்தப்பட்டிருந்தது. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மூலம் எதிர்காலத்தில் இதன் உறுதி எமக்கு வழங்கப்படும். | கம்பனி பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் காணியை கையேற்றதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டு முதல் கம்பனியின் நாவல தொழிற்சாலை வளவில் ரூபா 4,200,000 பெறுமதியான 150 ஹியும் குழாய்கள் எவ்வித ஆவணமொன்றும் இல்லாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவை அவ்வாறு ஏன் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள எனவும் அந்த உருப்படிகளின் உரித்து யாரிமுள்ளது எனவும் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை. | இந்த ஹியும் குழாய்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்குரியாதக இருந்ததுடன் எமக்கு பொறுப்பேற்கப்பட்டதற் கான பிரதி இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பொருட்களை எடுத்துச்செல்லுமாறு பலதடவை அறிவித்திருந்த போதும் எவ்வித பொறுப்பேற்றலும் காணப்படவில்லை. எதிர்காலத்தில் கணக்காய்வுப் பிரிவுடன் பங்குபற்றலுடன் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனியிடமுள்ள சொத்துக்களை சரியாக இனங்காணப்பட வேண்டியதுடன் இருப்பு பொறுப்பேற்றல் பதிவேடுகளுக்கு உட்படுத்தல் முறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது தாய் கம்பனியின் பதவியணிக்காக 111 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்து 5 சதவீத சேவை வருமானமொன்றுடன் தாயக் கம்பனிக்கு இணைக்கப்பட்டிருந்த போதும் இவ்வாறு ஊழியத்தை வழங்கும் வியாபார நடவடிக்கை களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த புதிய மனிதவள சக்தி வழங்கல் செயற்பாடு (Man power) உள்ளடக்கப்பட்டு கம்பனியின் | இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் சேவை உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. | கம்பனி புதிய வியாபார சந்தர்ப்பங்கள் அமைப்பு அகவிதிக்கு உள்ளடக்கி அதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டயாப்பை திருத்தம் செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டில் கம்பனி தனது தாய் கம்பனியிடமிருந்து ரூபா 200 மில்லியன் தொகையை 12 சதவீத வட்டிக்கு பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்ததுடன் இக்கடன் தொகையை பயன்படுத்தி கம்பனி கடல் மணலை கழுவி பொதியிடும் செயற் திட்டமொன்றை கெரவலபிட்டியவில் ஆரம்பித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 136.47 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் இச்செயற்திட்டத் திற்காக கம்பனி முறையான சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்ளாமல் இருந்ததுடன் செயற்திட்டத்திற்காக சுற்றடால் மதிப்பீட்டு அறிக்கையும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. மேலும் நிர்மாணத்திற்குரிய திட்டம் குறித்த பிரதேச சபையினால் அங்கீகரித்துக்கொள்ளாமல் இருந்ததுடன் உரிய வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. | மணலை கழுவி பொதியிடும் செயற்திட்டம் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தில் 2018.04.05 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தினாலேயே கடன்தொகையொன்ற வழங்கி செயற்திட்டத்தை நடாத்திச் செல்வதற்காக தேவையான மூலப்பொருளான கழுவப்பட்ட மணல் 03 மாத கடன் வசதிகளின் கீழ் வழங்குமாறும் அக்கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த முன்மொழிவு பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டதுடன் பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எதிர்ாலத்தில் எம்மால் சகல திட்டங்களும் நகர அபவிருத்தி அதிகாரசபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. | கம்பனி புதிய வியாபார நடவடிக்கைகளுக்காக சாத்திய வள ஆய்டிவொன்றை மேற்கொண்டு தீர்மானம் எடுக்க வேண்டியதுடன் அந்நடவடிக்கைகள் தொடர்பாக அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் |
| (உ) | மேலும் கம்பனியால் கடல் மணலை கழுவி பொதியிடும் மேற்படி செயற்திட்டத்திற்காக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்குரிய கெரவலபிட்டியவில் 02 ஏக்கர் காணியை மாத்திரம் பாவனைக்கு எடுத்திருந்த போதும் அது தொடர்பாக இருதரப்பிருக்கும் இடையில் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கிவல்லை. | எதிர்காலத்தில் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்படும் காணி குத்தகைக்கு எடுத்தல் தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திற்காக பயன்படுத்தும் வெளித்தரப்பினரின் சொத்துக்கள் தொடர்பாக உரிய தரப்பினருடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | 2014 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 2014/89/554 ஆம் இலக்க | தற்போதய நிதி பற்றாக்குறை காரணமாக கொண்டு | பிரேரிக்கப்பட்ட பங்கிலாபத்தை |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம் ரூபா 4,555,193 ஆன பங்கிலாபமொன்று பிரேரிக்கப்பட்டிருந்த போதும் 2019 மார்ச் 04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தாய் கம்பனிக்கு குறித்த பங்கிலாபம் கோரப்பட்டிருந்த போதும் அதனை கொடுப்பனவு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பணத்தை கொடுப்பனவு செய்ய கம்பனிக்கு இயலாமல் உள்ளது. நிதிநிலமை சீரடைந்தவுடன் கொடுப்பனவு செய்யப்படும். | கொடுப்பனவு செய்ய கம்பனி செயற்பட வேண்டும். |
| (எ) | ரூபா 26.93 மில்லியன் பெறுமதியான சிறைச்சாலை நிர்மாண செயற் திட்டத்தின் மீளாய்வாண்டின் இறுதி வரை நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் முறையே 43 சதவீதம் மற்றும் ரூபா 95 ஆக இருந்த போதும் அதற்காக கம்பனி உடன்படிக்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அத்திகதியில் சேவைக்குரிய நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட மீதி ரூபா 15.14 மில்லியனாக இருந்தது. | அப்பணத்தை கோரி விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக்கடிதங்கள் இதனுடன் இணைக்கப்பப்பட்டுள்ளது. | வெளித்தரப்பினருடன் கம்பனி மேற் கொள்ளும் ஒப்பந்தங் களுக்காக இரு தரப்பினருக்கு இடையே உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | ரூபா 6.63 மில்லியன் பெறுமதியான இரண்டாம் மாடியின் தாதியர் சேவையாளர் (Nursing Branch) பிரிவிற்கு நிலக்கல் பிடிக்கும் செயற் திட்டத்தின் மீளாய்வாண்டின் இறுதி வரை பௌதீக முன்னேற்றம் 50 சதவீதமாக இருந்த போதும் எவ்வித நிதி முன்னேற்றமும் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் இந்த ஒப்பந்தம் தொடர்பாக சுகாதார அமைச்சுடன் கம்பனி உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிலக்கல் பிடிக்கும் செயற்பாடுதற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த பணமும் அறவிடப்பட்டுள்ளது. | செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | கம்பனியால் ரூபா 11.14 மில்லியன் பெறுமதியான 02 ஒப்பந்தங்கள் உப ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதும் அதற்காக உப ஒப்பந்தக்காரர் களிடமிருந்து செயலாற்றல் பிணை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் பிணைக்கு பதிலாக அந்த ஒப்பந்தக்காரர்களின் பட்டியல்களிலிருந்து அப்பணம் அறவிடப்பட்டுள்ளது. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஔ) கம்பனியால் முன்னைய ஆண்டின் போது இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திடமிருந்து மாதாந்த கடன் தவணை ரூபா 500,000 தொகையை செலுத்துவதற்கு இணங்கி இணங்கி பெற்றுக்கொண்ட ரூபா 25 மில்லியனான தற்காலிக கடன்தொகையில் மீளாய்வாண்டின் இறுதியில் 02 மாதங்களின் கடன் தவணையான ரூபா 1 மில்லியன் மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் நிலுவையான 17 மாதாந்த கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 8.5 மில்லியனாக இருந்தது. இவ்வாறான நிலைமையொன்றின் கீழ் கம்பனிக்கு மேலும் மீளாய்வாண்டின் போது இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 200 மில்லியன் கடன் வசதிகள் பெற்றுக்கொண்டமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது. | இந்த 25 மில்லியன் தொகையும் கம்பனியின் அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இத்தவணையை கொடுப்பனவு செய்ய முடியாதிருப்பதை ஏற்றுக் கொள்கின்றேன். கம்பனியின் நிதி நிலைமை சீரானதுடன் தவணை கொடுப்பனவு ஆரம்பிக்கப்படும். | கம்பனி கடன்களை பெறும் போது அவற்றை மீண்டும் கொடுப்பனவு செய்யும் உள்ளவாறான தன்மை தொடர்பாக முறையான பகுப்பாய்வொன்று மேற்கொள்ள வேண்டியதுடன் சுயமாக நிதிமுறைமையொன்று பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 7 தொழிற்சாலைகள் மற்றம் பட்டறைகளின் பங்களிப்பு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) மீளாய்வாண்டின் கம்பனியின் ஏழு தொழிற்சாலைகள் மற்றும் ஒரு வேலைத்தளத்தின் திரட்டிய பங்களிப்பு ரூபா 1.58 மில்லியனாக இருந்தது. கம்பனி அந்த கைத்தொழிற்சாலை களில் உற்பத்தி தொடர்பாக முறையான முகாமைத்துவ மொன்றில்லாமையால் இந்நிலைமைக்கு நேரடியாக தாக்கியிருந்தது. நாவல சிமெந்து கல் உற்பத்தி தொழிற்சாலையில் ஒரு நாளைக்கு 1200 சிமெந்து கற்கள் தயாரிக்கும் | கம்பனியால் உற்பத்தி செய்யப்படும் கீமெந்து கற்களுக்கான கிரயம் மிகவும் அதிகமான மட்டத்தில் காணப்படுகின்றன. நாவல தொழிற்சாலையில் அதற்காக நிரந்தர தொழிலாளர்களை ஈடுபடுத்துவதே காரணமாகும். இந்த நிரந்தர ஊழியர்களின் சம்பள அளவு மிகவும் உயர்ந்த மட்டத்தில் | கம்பனியின் தொழிற்சாலை களில் செயற்பாட்டு நடவடிக்கைகள் முறையான முகாமைத்துவத்துட ன் மேற் கொண்டு அவற்றின் பங்களிப்பினை மேம்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயலுமை காணப்பட்ட போதும் தொழிற்சங்க மற்றும் கம்பனிக்கு இடையே ஒரு நாளைக்கு 800 சிமெந்துக் கற்கள் உற்பத்தி செய்வதற்காக இணக்கம் காணப்பட்டிருந்தது. அதன் காரணமாக உற்பத்திக் கிரயம் அதிகரித்திருந்ததுடன் இந்நிலைமை கம்பனியன் நட்டத்திற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது சிமெந்து கல் உற்பத்திக்காக ரூபா 6 மில்லியன் நேர் உழைப்பிற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அது வருடாந்த சீமெந்து கல் விற்பனையின் 52 சதவீதமாக இருந்தது. மேலும் மீளாய்வாண்டின் அம்பாந்தோட்டை தொழிற் சாலையில் எவ்வித உற்பத்தியும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | காணப்படுவதுடன் அற்கான காரணம் நீண்டகாலமாக கம்பனியில் சேவை புரிவதாகும். ஆகவே சீமெந்து கல் உற்பத்தி செய்வதற்காக தொழிலாளர் உழைப்பு அதிகளவில் பயன்படுத்தப்படு கின்றது. அவ்வாறே இந்த நிரந்தர ஊழியர்கள் தொழில் உரித்துகளுக்காக நடவடிக்கை எடுத்து வருவதுடன் அவர்களின் சேவைக் காலத்தை குறைவாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருகின்றது. வெளி கிளைகளுக்கும் இந்த விடயம் பொருந்தும். | |
| (ii) | கொட்டகல மற்றும் ஹிங்குரக்கொட தொழிற் சாலைகளில் சீமெந்து கல் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் கூடுதலான இயலளவொன்று காணப்பட்ட போதும் அதற்காக போதியளவில் கேள்வி இல்லாமையால் உற்பத்தி பொது மேந்தலை கூடிய பெறுமதியொன்றைக் கொண்டிருந்தது. அவ்வாறே ஹிங்குரக்கொட தொழிற் சாலையின் விற்பனை குறைவடைந்தமையால் பொது மேந்தலை கிரயம் கூடிய பெறுமதியொன்றை கொண்டிருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக பங்களிப்பு 75 சதவீத வீழ்ச்சியொன்றாகும். | ஹிங்குரக்கொட தொழிற்சாலையை எடுக்கும் போது வன பாதுகாப்பு திணைக்களம் மற்றும் இலங்கை புகையிரத திணைக்களம் என்பவற்றிடமிருந்து 2017 ஆம் ஆண்டின் போது சில கட்டளைகள் கிடைக்கப்பெற்றிருந்த போதும் 2018 ஆம் ஆண்டின் போது எவ்வித கட்டளைகளும் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே வேலைத்தள மேற்பார்வை பலவீனமானதென ஏற்றுக்கொள்கின்றேன்2018 ஆம் ஆண்டின் இறுதி பகுதியில் இடம்பெற்ற அரசியல் ஸ்திரமற்ற நிலைமை காரணமாக எந்தவொரு வேலையையும் முறையாக மேற்கொள்ள முடியவில்லை. | கம்பனியின் தொழிற்சாலைகளில் செயற்பாட்டு நடவடிக்கைகள் முறையாக முகாமை செய்து அவற்றின் பங்களிப்பினை அதிகரிக்க வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையான அங்கீகாரமொன்ற இல்லாமல் கம்பனி மீளாய்வாண்டின் போது இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் 07 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 192,000 ஆன படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த போதும் எமது நிறுவனத்திற்கு சேவை வழங்கும் உத்தியோகத்தர்களுக்கு இத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதற்ககாக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றப்பட்டுள்ளது. | வெளிநிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 107 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறான பதவியணியினர் 77 ஆக இருந்தது. ஆதலால் அத்திகதயில் கம்பனியில் காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை 30 ஆக இருந்ததுடன் இவ்வெற்றிடங்கள் 30 இல் 4 நடுத்தர மட்ட முகாமைத்துவ பதவிகள் 5 ஆண்டுகளாக வெற்றிடமாக காணப்பட்டதுடன் 11 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும் 15 நிரந்தர தொழிலாளர் பதவிகளும் வெற்றிடங்களாக இருந்தன. | தொழிலாளர் சம்பளம் மிகவும் அதிகரித்த மட்டத்தில் காணப்படுவதால் தொழிலாளர்கள் ஒப்பந் முறைமை ஊடாக எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. கம்பனியின் செயற்பாடுகள் பல்வகைப்படுத்தப்பட்டதன் கீழ் எதிர்காலத்தில் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியுமாக இருக்கும் தற்போது அத்தியவசிய ஊழியர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் நிதி நிலமை சீராக விட்டால் இதே நிலைமையில் காணப்படும் | கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) சேவையில் ஈடுபட்டுள்ள 77 பேரில் 23 பேர் ஒப்பந்த அடிப்படையில் இருந்ததுடன் ஒரு | 2019 ஆம் ஆண்டில் இந்த ஊழியர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி நிரந்தர | கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் வெற்றிடங்கள் விரைவில் |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் விடுவிப்பு அடிப்படையில் பொறியியலாளர் ஒருவராக இருந்தார். | பதவியணிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எமது சம்பள அளவின் அடிப்படையயில் பொறியியலாளர் ஒருவரின் சேவையை பெற்றுக்கொள்ள முடியாமையாமல் இருந்ததுடன் செயலாற்றல் மேம்படுத்தப்பட்டதும் இவ்வெற்றிடம் நிரப்பபடும் | நிரப்பப்பட வேண்டும். |
| (இ) | கம்பனியால் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்ற தயாரிக்கப்பட்டிருந்த போதும் கம்பனியின் பொது முகாமையாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு விபரங்கள் அக்கோவையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | பொது முகாமையாளர் பதவி பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் | சகல பதவிகளும் மேவுகை செய்யப்படக்கூடிய வகையில் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஈ) | 2014 ஆம் ஆண்டிலிருந்து வழங்கல் முகாமையாளர், பொறியியலாளர், கணக்காளர், விநியோக முகாமையாளர், போன்ற சில முக்கிய பதவிகள் வெற்றிடங்களைக் இருந்ததுடன் இந்நிலைமை யானது அது கம்பனியின் சுமூகமான செயற்பாட்டினை மோசமாக பாதித்திருந்தது. | நிறுவனத்தின் நிதி நிலைமை அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமல் இருப்பதுடன் எதிர்காலத்தில் வெற்றிடங்கள் நிரப்பப்படும். | கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்ட வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்பட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கம்பனி மணலைக் கழுவி பொதி செய்யும் செயற்திட்டம் - கெரவலப்பிட்டிக்காக அமெரிக்க டொலர் 665,827 (ரூபா 109.95 மில்லியன் பெறுமதியான உருப்படிகளை 04 சீனக் கம்பனிகளிலிருந்து கொள்வனவு செய்திருந்தன. மேற்குறித்த கொள்வனவிற்கு உரிய கொள்வனவுத் திட்டமொன்று | இது முன்னராக திட்டமிடப்பட்ட ஒன்றல்லாததாக இருந்தமையால் பாதீட்டில் உள்ளடக்கப்படவில்லை. கேள்வி ஆவணங்கள் கோரலுக்காக தொழில்நுட்ப விதந்துரைகள் (Technical Specification) தயாரிக்கப் பட்டிருந்ததுடன் உருக்கினால் பூர்த்தி | வருடாந்த பாதீட்டில் சகல கொள்வனவுகளும் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் பெறுகை செயற்பாடுகள் தொடர்பாக அரசின் பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக கம்பனி தயாரித்திருந்த பாதீட்டில் இந்த கொள்வனவு உள்ளடக்கப்பட்டிருநக்கவில்லை. அவ்வாறே கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி உருப்படி தொடர்பாக தொழில்நுட்ப விதந்துரைகள் (Technical Specification) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பெறுகைக்குரிய கேள்வி ஆவணங்கள் (Bid Documents) மற்றும் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | செய்யப்பட்ட கட்டிடத்திற்காக உள்நாட்டு ரீதியில் விலை கோருவதற்கு கேள்வி ஆவணங்கள் (Bid Documents) தயாரித்து கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். |
| (ஆ) | பெறுகை செயற்பாட்டின் போது உள்நாட்டு வழங்குனரிடமிருந்து திறந்த போட்டி கூறுவிலை கோராமல் இணையத்தளத்தின் ஊடாக மாத்திரம் வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை கோரல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அக்கூறுவிலை கோருவதற்குரிய உறுதிப்படுத்தல் ஆவணங்கள் கேள்வி மதிப்பீடு செய்யும் நியதிகள், கேள்விதார்களின் முன்னைய மற்றும் பின்னைய தகைமை தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இயந்திர உபகரணங்கள் கொள்வனவு தொழில்நுட்ப குழுவில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் தொடர்பான விசேட அறிவுடன் கூடிய அங்கத்தவரொருவர் இருந்ததாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கேள்வி | மணல் பொதியிடும் இயந்திரம் வைக்கப்பட்டுள்ள கட்டிடத்திற்காக மாத்திரம் உள்நாட்டு வழங்குனரிடமிருந்து திறந்த போட்டி கூறுவிலை கோரப்பட்டதுடன் அதன் போது அக்கட்டிடத்திற்காக விலை கூடிய கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஏனைய இயந்திரங்களான மணல்இடும் இயந்திரம், மணல் அரிக்கும் இயந்திரம், நீர் வடிகட்டும் இயந்திரம் (RO System) இற்காக உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்து இணையத்தளத்தின் ஊடாக கூறுவிலை கோரல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வெளிநாட்டு ரீதியில் கூறுவிலைகள் கோரப்பட்டு கூறுவிலை திறப்பதற்காக குறித்த வழங்குனர்கள் சமூகமளிக்கவில்லை. அம்மதிப்பீட்டிற்காக கேள்வி கோரல் பிரதிகள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.<br><br>இந்த மதிப்பீடு குழுவில் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் இரண்டு நிரந்தர பொறியியலாளர்கள் | கூறுவிலை கோரும் போது வெளிப்படையாக செயற்பட வேண்டியதுடன் கேள்வி மதிப்பீடு செய்யும் போது பயன்படுத்திய நியதிகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | | இருந்ததுடன் அவர்களால் கேள்வி மிகவும் சரியாக மேற்கொள்ளப்பட்டமைக்கு கொள்வனவு செய்யப்பட்ட சகல உபகரணங்கள் சிறப்பான செயற்படு வதனைக் குறிப்பிடலாம். | |
| (இ) | பெறுகை செயற்பாடுகளின் போது வழங்குனருடன் முறையான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதும் மேற்குறித்த பெறுகையின் போது கம்பனி வழங்குனருடன் அவ்வாறு உடன்படிக்கையில் கைச் சாத்திட்டிருக்கவில்லை. | இணையத்தின் மூலமாக கொள்வனவு செய்யும் போது உள்நாட்டு முகவர்கள் இல்லாமையால் இவ்வாறான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படவில்லை. | பெறுகை வழங்கும் போது வழங்குனருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும். |

**3.6 ஒப்பந்த செயற்பாடு**

------------------------------

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கிடைத்த ஒப்பந்தங்கள் கம்பனியால் நேரடியாக மேற்கொள்ளப்படாமல் அநேகமானவை வழமை போன்று வெளியக உப ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்நிலைமையின் பேரில் 3 சதவீதம் முதல் 5 சதவீததிற்கு இடைப்பட்ட குறைந்த இலாப எ்லடையொன்ற மா்திரம் க்பனிக்க உழைக்க கூடியதாக இருந்தது. | முன்னைய ஆண்டில் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக எமது கம்பனி மூலம் உப ஒப்பந்தக்காரர்களுக்கு செயற்திட்டங்கள் வழங்கல் இடம்பெறாததுடன் 2016,2017 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட செயற்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. கம்பனியால் நேரடி ஒப்பந்தத்தின் கீழ் செயற்திட்டங்களை மேற்கொள்தற்கு தேவையான ஊழியர் மற்றம் உத்தியோகத்தர்கள் இல்லாமையால் உப ஒப்பந்தக்காரர்களுக்கு கேள்வி நடைமுறை மூலம் நியமிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. | கம்பனி பொறுப்பேற்கும் ஒந்தங்களை நேரடியாக மேற்கொண்டு தமது இலாப எல்லையை அதிகரிப்பதற்கு செயற்பட வேண்டும். |
| (ஆ) | கடுகண்ணாவ டோசன் கோபுர செயற்திட்டத்திற்காக உப ஒப்பந்தக்காரருக்கு செலுத்திய ரூபா 1,159,471 ஆன வேலை ஆரம்ப முற்பணத்திற்கு மேலதிகமாக ரூபா 2,000,000 | கடுகண்ணாவ டோசன் கோபுர செயற்திட்டத்திற்காக உப ஒப்பந்தக்காரருக்கு செலுத்திய ரூபா 2,000,000 நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து | அரச பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு வேலை ஆரம்ப முற்பணம் |

| | | | |
|---|---|---|---|
| | ஆன முற்பணம் வழங்கிய கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது. | கிடைத்ததன் பின்னர் வழங்கிய பணமாகும். | வழங்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் யூன் 26 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட ரூபா 22.87 மில்லியனான பேராதனை பல்கலைக்கழகத்தின் மண்டபமொன்றை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 20 சதவீதமாக இருந்தும் எவ்வித பௌதீக முன்னேற்றத்தையும் அடைந்திருக்கவில்லை. மேலும் இச்செயற்திட்டத்திற்காக இரு தரப்பினரும் உடள்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டி ருக்கவில்லை. | பேராதனை பல்கலைக்கழகத்தின் மண்டப மொன்றை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தின் இரு தரப்பு உன்படிக்கை 2018/10/30 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் வங்கி பிணை பொறுப்பொன்று சமர்ப்பித்தலின் மூலம் அச்செயற்திட்டத்திற்கரிய முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிர்மாண வளவு அமைந்துள்ள இடத்தில் பாரியளவு அரங்களின் அளவினை அப்புறப்படுத்துவதற்கு பல்கலைக்கழகத்தினால் நீண்ட காலமொன்று எடுக்கப்பட்டதால் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்னகாக வேலைத் திட்டமொன்ற செயற்படுத்தப்படவில்லை. | சேவைநாடுனரின் ஒப்பந்த வேலைகள் மிகவும் சிறந்த முகாமையுடன் மேற்கொண்டு காலப்பகுதியில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். இந்நிலைமை கம்பனியின் நன்மதிப்பிற்கு பாதகமாக தாக்கமளிக்கலாம். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இதியில் கம்பனி நிறைவேற்றிய ஒப்பந்தங்களுக்காக சேவை நாடுனர் நிறுவனங்களுக்கு பட்டியலிடப்பட்ட பெறுமதி ரூபா 117.59 மில்லியனாக இருந்த போதும் அந்நிறுவனங்களிலிருந்து கிடைத்த தொகை ரூபா 43.59 மில்லியனாக இருந்தது. அத்துடன் மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 7774 மில்லியனாக இருந்தது. கம்பனி நிறைவேற்றிய ஒப்பந்தங்களில் மேலதிக வேலை அங்கீகரிக்கப்படாமை, ஒப்பந்த உடன்படிக்கைகளுக்கு வராமை, ஒப்பந்தகாலம் நீடிப்பு அங்கீகரிக்கப்படாமை என்பன இந்நிலைமைக்கு காரணமாகும். | இறுதிப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு விரைவில் பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சேவைநாடுனரின் ஒப்பந்த வேலைகள் மிகவும் சிறந்த முகாமையுடன் மேற்கொண்டு காலப்பகுதியில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். இந்நிலைமை கம்பனியின் நன்மதிப்பிற்கு பாதகமாக தாக்கமளிக்கலாம். |
| (உ) | மீளாய்வாண்டின் போது கம்பனியால் ரூபா 67.40 மில்லியனான பெரேவவ கேபியன் சுவர் நிர்மாணத்திற்கான 02 | நாட்டில் காணப்பட்ட அரசியல் ஸ்தரமற்ற நிலைமை காரணமாக குறித்த ஒப்பந்தக்காரர்கள் செயற் திட்டத்தின் வேலைகளை | சேவைநாடுனரின் ஒப்பந்த வேலைகள் மிகவும் சிறந்த முகாமையுடன் மேற்கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தங்கள் உப ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்நிர்மாணங்களின் நிதி பௌதீக முன்னேற்றம் அறிக்கையிடப்படாமல் இருந்ததுடன் அவற்றின் வேலை 2019 சனவரியில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. | ஆரம்பிக்காமல் இருந்ததுடன் 2019 சனவரியில் செயற்திட்ட நிர்மாண நடவடிக்கைககள் ஆரம்பிக்கப்பட்டன. | காலப்பகுதியில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். இந்நிலைமை கம்பனியின் நன்மதிப்பிற்கு பாதகமாக தாக்கமளிக்கலாம். |
| (ஊ) | கம்பனியால் ரூபா 13.90 மில்லியனான முண்டிகல ஆரண்ய சேனாசனயின் இரண்டு மாடிக் கட்டிடத்தின் நிர்மாண ஒப்பந்தம் 2016 யூலை 20 ஆந் திகதி பொறுப்பேற்றிருந்ததுடன் அது 120 நாட்களில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. எனினும் மீளாய்வாண்டு இறுதி வரை ஒப்பந்தத்தை பொறுப்பேற்ற 891 நாட்கள் கடந்திருந்த போதும் ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை பௌதீக முன்னேற்றம் 25 சதவீதமான குறைவான பெறுமதியொன்றை எடுத்திருந்ததுடன் எவ்வித நிதி முன்னேற்றமொன்றும் பெற்றிருக்கவில்லை. | தற்போது நேர் உழைப்பு அடிப்படையில் வழங்கி செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வருவதடன் மூலப்பொருள் போக்குவரத்து மற்றம் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்வதில் சிக்கல்கள் தொடர்பாக தற்போது மேற்கொள்ளப்பட்டும் பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சேவைநாடுனரின் ஒப்பந்த வேலைகள் மிகவும் சிறந்த முகாமையுடன் மேற்கொண்டு காலப்பகுதியில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். இந்நிலைமை கம்பனியின் நன்மதிப்பிற்கு பாதகமாக தாக்கமளிக்கலாம். |

## 3.7 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கம்பனியின் வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் கம்பனியின் 3 ஊழியர்களின் சேவையில் ஈடுபடத்தியிருத்து. | அவர்களின் சம்பளம் கூட்டுத்தாபனத்தின் ஊடாக மீள்நிரப்பப்படுகின்றது. | அரச சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.8 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பனிக்குரிய ஹிங்குரக்கொட தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் அச்சுக்கல் அடுக்கி வைப்பதற்கு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் அழுக்கடைந்து இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே தொழிற் சாலையில் காணப்பட்ட கல் உற்பத்தி இயந்திரத்தின் இயலளவும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஹிங்குரக்கொட தொழிற்சாலைக்காக தற்போது விசேட கட்டளைகள் கிடைக்காமையால் தற்போது ஊழியர்கள் தங்கவைக்கப்படுவதில்லை. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் கட்டளைகள் பெற்றக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் சொத்துக்கள் பயன்படுத்தப்படும். | கம்பனிக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கபூர்வமாக முகாமை செய்து அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பயனை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஆ) 2015 யூலை 15 ஆந் திகதி நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 41,508,000 தொகையான சீமெந்து கல்வெட்டும் இயந்திரமொன்றும் ரூபா 2,695,000 சீமெந்து கல் அமைக்கும் தட்டு கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை நோக்கத்திற்கு பயன்பாட்டிற்கு எடுக்கப் படாமல் இருந்ததுடன் இயந்திரத்திற்காக சேத நட்டம் (Impairment loss) னங்காணப்பட்டிருக்கவில்லை. | தற்போது புத்தக பெறுமதி சந்தை விலையை விட குறைவான பெறுமதியை எடுப்தால் சேதநட்டம் மதிப்பீடு செய்யமுடியாது. தற்போது இயந்திரம் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இயந்தரிம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையால் அவற்றின் சேதநட்டம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க்பபட வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 ஜூன் 02 ஆந் திகதிய 12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியால் 2018 ஆம் ஆண்டிற்கான இறுதி நிதிக்கூற்றக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 03 மாதங்கள் தாமதித்து அதாவது 2019 யூன் 11 ஆந் திகதி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி அளவில் பணிப்பாளர் சபை நியமிக்கப்படாமல் இருந்தமையால் தலைவரின் கையொப்பத்துடன் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. பணிப்பாளர் சபை நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் அங்கீகாரம் பெறப்பட்டு 2019 யூன் 11 ஆந் திகதி மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் கம்பனியினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தன் காரணமாக கம்பனியின் செயலாற்றல் மதிப்பீடு கணக்காய்வின் போது முடியயாமல் இருந்தது. | கம்பனியின் செயலாற்றலை நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் மேற்கொள்ள முடியாமையால் கூட்டிணைந்த திட்டமொன்ற தயாரிக்கப்படவில்லை. கம்பனியின் செயற்பாடுகள் பல்வகைப்படுத்தப்பட்டமையால் எதிர்காலத்தில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்ற தயாரிக்கப்பட வேண்டும் |

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் | கூட்டுத்தாபனத்திலுள்ள உள்ளக | உள்ளக கணக்காய்வு செயற்திறனான கட்டுப்பாட்டு |

| | | |
|---|---|---|
| நியமிக்கப்படாமல் இருந்ததுடன் உள்ளக் கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக உள்ளகக் கட்டுப்பாட்டின் பகுதியொன்றான உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகள் நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர்கள் சமூகமளித்து உள்ளகக் கணகக்காய்வினை மேற்கொள்கின்றனர. மேலும் பதில் பிரதி பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) அவர்களின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளது. | முறைமையொன்றாக பயன்படுத்த வேண்டும். |

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடும் போது 47 சதவீதம் முதல் 45 ஆன போதியளவு விலகலொன்ற அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது | பாதீட்டுடன் மாதாந்த கணக்கு அறிக்கைகள் தயாரிக்கப்படுவதுடன் அக்கணக்கு எமது அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படும். | பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயயன்படுத்தப்பட வேண்டும். |